தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்









Vol: 02 | Issue: 158 | 4 Pages | 5.1.2025 | Sunday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825

மலர்: 02 | இதழ்: 158 | 4 பக்கங்கள் | 5.1.2025 | ஞாயிற்றுக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825

**உயிருடம்பின் நீக்கியா ரென்ப செயிருடம்பின்**
**செல்லாத்தீ வாழ்க்கை யவர்**

**விளக்கம்:** நோய் மிகுந்த உடம்புடன் வறுமையானதீய வாழ்க்கை உடையவர், முன்பு கொலை பல செய்து உயிர்களை உடம்புகளில் இருந்து நீக்கினவர் என்று அறிஞர் கூறுவர்.

## ஆம் ஆத்மியை பேரழிவு என பிரதமர் விமர்சிப்பது நல்ல நகைச்சுவை டெல்லி மந்திரி பதிலடி



டெல்லி, ஜன.5

டெல்லி மாநில தேர்தல் விரைவில் நடைபெற இருக்கும் நிலையில், டெல்லியில் ஆளும் ஆம் ஆத்மியை பிரதமர் மோடி டெல்லிக்கான பேரழிவு (AApada) என விமர்சித்தார். மேலும், "நாம் பேரழிவை பொறுத்துக் கொள்ள முடியாது.நாம்அதைநீக்கும்வோம்" என்ற முழக்கத்தை முன்வைத்துள்ளார்.

இந்த நிலையில் பிரதமர் மோடி ஆம் ஆத்மியை விமர்சிப்பதை சிரிப்பது போல் உணர்கிறேன் என டெல்லி மாநில மந்திரி சவுரப் பரத்வாத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சவுரப் பரத்வாஜ் கூறியதாவது:

இதுபோன்ற அறிக்கைகள் (கருத்துகள், விமர்சனங்கள்) பிரதமருக்கு பொருந்தாது. கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசு டெல்லியை பாதியளவு கொண்டுள்ளது. நாங்கள் பாதியளவு கொண்டுள்ளோம். நாங்கள் கழிவுநீர் சிஸ்டம், தண்ணீர் விநியோகம், மின்சாரம் ஆகிய துறைகளை முன்னேற்ற பணிகள் செய்துள்ளோம்.

டெல்லிக்காக மத்திய அரசு செய்தது என்ன? என்பதை நான் கேட்க விரும்புகிறேன். தொழில் அதிபர்கள் மிரட்டப்பட்டனர். மக்கள் பட்டப் பகலில் கொல்லப்பட்டனர். டெல்லியில் தற்போதைய நிலைமை மிகவும் மோசமாகியுள்ளது. இதற்கெல்லாம் பாஜகவின் மத்திய அரசு பொறுப்பேற்க வேண்டும்.

டெல்லியில் உள்ள கல்வி முறை பற்றி பிரதமர் மோடி பேசியதை நான் சிரிப்பது போல் உணர்கிறேன். இன்று உலகின் மிகப்பெரிய நபர்கள் எல்லாம் டெல்லியில் உள்ள பள்ளிகளை பார்க்க வருகின்றன. நானும் பிரதமர் மோடியை அழைக்கிறேன். முதலில் டெல்லியில் உள்ள அரசு பள்ளிகளை பாருங்கள். அதற்குப் பிறகு வேலை நடந்துள்ளதா? இல்லையா? என்பதை முடிவு செய்யுங்கள். மிகப்பெரிய மேடையில் இருந்து இதுபோன்று பேசுவது துரதிருஷ்டவசமானது.

இவ்வாறு பிரதமர் மோடிக்கு சவுரப் பரத்வாஜ் பதில் அளித்துள்ளார்.

## இரவில் தப்பான ரூட்டில் சென்ற டிரைவர்.. ஓடும் ஆட்டோவில் இருந்து குதித்த பெண் பகீர் சம்பவம்

பெங்களூர், ஜன.5

பெங்களூரில் டிரைவர் தப்பான வழியில் சென்றதால் ஓடும் ஆட்டோவில் இருந்து 30 வயது பெண் ஒருவர் குதித்துள்ளார். இரவு ஹோரமாவில் இருந்து தனிசந்திராவில் உள்ள தனது வீட்டிற்குச் செல்வதற்காக நம்ம யாத்ரி செயலி மூலம் ஆட்டோவை முன்பதிவு செய்திருந்தார். இருப்பினும், ஓட்டுநர்வழக்கமானவழியைப்பின்பற்றாமல், ஹெப்பல் பகுதியை நோக்கிச் செல்லத் தொடங்கினார். ஏன் வேறு ரூட்டில் செல்கிறீர்கள் என பலமுறை கேள்வி கேட்டும், டிரைவர் பதிலளிக்கவில்லை. டிரைவரின் சிவந்த கண்களையும் அவர் போதையில் இருந்ததையும் அந்தப் பெண் கவனித்தார். வாகனம் நாகவாராவை அடைந்தபோது, ஓட்டுனர் திடீரென எதிர்பாராத விதமாக ஒரு மேம்பாலம் நோக்கி திரும்பினார். வண்டியை நிறுத்துமாறு பெண் கெஞ்சியும் ஓட்டுநர் கேட்கவில்லை. எனவே அச்சமைடைந்த அந்த பெண் உயிரையும் பொருட்படுத்தாமல் ஆபத்தான முடிவை எடுத்தார். தாழ்வான பாதையில் ஆட்டோ மெதுவாகச் சென்றபோது, அப்பெண் ஓடும் வாகனத்திலிருந்து குதித்தார். அதிஷ்டவசமாக பெரிய காயங்கள் எதுவுமின்றி அவர் உயிர்பிழைத்துள்ளார். பெண் வெளியே குதித்த பிறகு, டிரைவர் அவளை அணுகி ஆட்டோவுக்கு திரும்பும்படி சமாதானப்படுத்த முயன்றார். ஆனால் அதை புறக்கணித்த பெண் வேறு ஆட்டோவில் ஏறி பயணித்துள்ளார். இந்த அச்சமூட்டும் அனுபவத்தை பெண்ணின் கணவன் சமூக வலைத்தளங்களில் பகிர்ந்துள்ளார். இரவு 9 மணிக்கு என் மனைவிக்கு இது நடந்துள்ளது, இன்னும் எத்தனை பெண்கள் இதேபோன்ற சூழ்நிலையை எதிர்கொள்கிறார்கள் என்று கற்பனை செய்து பாருங்கள் என்று பெங்களூரு போலீசை டேக் செய்து அவர் கேள்வி எழுப்பியுள்ளார். உதவிக்கு எங்களை DM செய்யுங்கள் என்று நம்ம யாத்ரி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## டெல்லி சட்டமன்ற தேர்தல் தேதி அடுத்த வாரம் அறிவிப்பு?

டெல்லி, ஜன.5

டெல்லியில் ஆம் ஆத்மி கட்சி ஆட்சி செய்து வருகிறது. அக்கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர் அரவிந்த் கெஜ்ரிவால் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ததால், அதிஷி முதல்வராக இருந்து வருகிறார்.

ஆம் ஆத்மியின் ஆட்சிக் காலம் பிப்ரவரி மாதத்துடன் முடிவடைகிறது. அதற்கு முன் தேர்தல் தேர்தல் நடத்தப்பட வேண்டும். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதில் இருந்து தேர்தல் வாக்குப்பதிவுக்கு சுமார் ஒருமாத இடைவெளி அவசியம். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடன் தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலுக்கு வரும். அதன்பின வேட்புமனு தாக்கல், வேட்புமனு பரிசீலனை, வேட்புமனு திரும்பப் பெறுதல் ஆகிய நடைமுறைகளுக்குப் பின் வாக்குப்பதிவு நடைபெறும். பிப்ரவரி மாதம் தேர்தல் நடைபெறும என்பதால் டிசம்பர் கடைசி வாரம் அல்லது ஜனவரி முதல் வாரத்தில் தேர்தல் தேதி அறிவிக்கப்படலாம் எனக் கருதி ஆம் ஆத்மி கட்சி முன்கூட்டியே தேர்தல் பணிகளை தொடங்கிவிட்டது. 70 தொகுதிகளுக்கும் வேட்பாளரை அறிவித்ததுடன், கெஜ்ரிவால் மக்களை ஈர்க்கும் கவர்ச்சிகரமான திட்டங்களை அறிவித்து அதற்கான விண்ணப்பத் பூர்த்தி செய்யும் பணியையும் தொடங்கி வைத்துவிட்டார். காங்கிரஸ் கட்சி 2 கட்ட வேட்பாளர்கள் பட்டியலை வெளியிட்டுள்ளது. பா.ஜ.க. விரைவில் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில் அடுத்தர வாரம் இந்திய தேர்தல் ஆணையம் டெல்லி மாநில சட்டமன்ற தேர்தலுக்கான தேதியை அறிவிக்கதிட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. பிப்ரவரி 3ம் வாரத்தில் ஒரே கட்டமாக சட்டமன்ற தேர்தலை நடத்த வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. டெல்லியில் ஆம் ஆத்மி, காங்கிரஸ், பா.ஜ.க. இடையே மும்முனை போட்டி நிலவுகிறது. இதற்கிடையே அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் கட்சி வேட்பாளர்களை அறிவித்துள்ளது. பகுஜன் சமாஜ் கட்சி தலைவர் மாயாவதி, டெல்லி தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்துள்ளார். தேர்தலில் வெற்றி பெற்றால் டெல்லி பெண்களுக்கு மாதந்தோறும் 2100 ரூபாய், முதியோருக்கு இலவச சிகிச்சை, கோவில் பூசாரிகளுக்கு உதவித் தொகை என கெஜ்ரிவால் வாக்குறுதிகள் அளித்துள்ளார்.

# சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு' கருத்தரங்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்



சென்னை, ஜன.5

சென்னை எழும்பூரில் உள்ள அருங்காட்சியக கலையரங்கத்தில் வருகிற 5ந்தேதி 'சிந்துவெளிப் பண்பாட்டுக் கண்டுபிடிப்பு' நூற்றாண்டு நிறைவு பன்னாட்டு கருத்தரங்கம் நடைபெற உள்ளது. கருத்தரங்கை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்க உள்ளார்.

மேலும் சர். ஜான் மார்ஷல் சிலைக்கு அடிக்கல் நாட்டியும் 'சிந்து வெளி வரிவடிவங்களும் தமிழ்நாட்டுக் குறியீடுகளும்: ஒரு வடிவவியல் ஆய்வு" நூலினைவெளியிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் அமைச்சர் தங்கம் தென்னரசு சிறப்புரையாற்றுகிறார்.

வரவேற்பு, கருத்தரங்கு நோக்கவுரையை தமிழக அரசின் நிதித்துறை செயலாளரும் தொல்லியல் துறை ஆணையருமான உதயசந்திரன் ஐ.ஏ.எஸ், தலைமையுரை தலைமைச் செயலாளர் முருகானந்தம் ஐ.ஏ.எஸ் ஆகியோர் உரையாற்ற உள்ளனர்.

# தென்காசி மாவட்டத்தில் MMU வாகனம்: கலெக்டர் கொடி அசைத்து துவக்கி வைத்தார்




தென்காசி, ஜன.5

தென்காசி மாவட்டத்தில் ரெட்கிராஸ் மாவட்ட தலைவர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ராஜ்பவனில் தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் VC மூலம் சிறப்புடன் கலந்து கொண்டு தென்காசி மாவட்ட MMU வாகனத்தை கொடி அசைத்து வைத்து துவக்கி வைத்து சிறப்பித்தார்கள். தென்காசி மாவட்ட துணைத் தலைவர் & தென்காசி மாவட்ட துணைக் கிளைத் தலைவர் கோட்டாட்சித் தலைவர் லாவன்யா அவர்கள் தலைமை ஏற்றார்கள். மாவட்ட சுகாதார அலுவலர் அவர்கள் ஆலோசனை வழங்கினார்கள். மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் இந்தியன் ரெட் கிராஸ் மாவட்ட துணைக் கிளையின் துணைத் தலைவர்திருகருப்பையா அவர்களும் சேர்மன் டாக்டர் வேதமூர்த்தி அவர்களும் துணை சேரமன் டாக்டர் சுப்பிரமனியன் அவர்களும் முன்னிலை வகித்தார்கள்.

இல்லம் தேடி ( நடமாடும் ) மருத்துவமனை வாகனத்தைப் பற்றி மாவட்ட நோடல் அலுவலர் & இந்தியன் ரெட் கிராஸ் மாவட்ட துணைக் கிளையின் செயலாளர் மாநில செயற்குழு உறுப்பினர் முகம்மது அன்சாரி விளக்கமளித்தார் தென்காசி கிளை நிர்வாக உறுப்பினர்களும் MMU வாகன மருத்துவர், செவிலியர் பார்மஸிஸ்ட், யூத் ரெட்கிராஸ் மாஸ் தன்னார்வ மாணவிகளும் கலந்து கொண்டார்கள் இந்த சேவை முற்றிலும் கட்டணமில்லா சேவை தென்காசி மாவட்ட மக்களின் இல்லம் தேடி சென்று மருத்துவ உதவி சென்றடையும்

# தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி மாவட்டம் அச்சன்புதூர் கிளையின் சார்பாக இஸ்லாம் ஓர் எளிய மார்க்கம் என்ற நேரடி கேள்வி பதில் நிகழ்ச்சி



தென்காசி, ஜன.4

தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் தென்காசி மாவட்டம் அச்சன்புதூர் கிளையின் சார்பாக ஞாயிற்றுக்கிழமை மாலை இஸ்லாம் ஓர் எளிய மார்க்கம் என்ற நேரடி கேள்வி பதில் நிகழ்ச்சி கிளைத் தலைவர் அஹமத் அலி தலைமையிலும் மாவட்டத் துணைச் செயலாளர்கள் வடகரை செய்யது அலி மற்றும் அப்துல் பாசித் முன்னிலையில் நடைபெற்றது

இதில் தவ்ஹீத் ஜமாஅத் பேச்சாளர் எம் ஏ அப்துர் ரஹ்மான் கலந்து கொண்டு ஆடம்பர திருமணம் ,பில்லி சூனியம்,, கருக்கலைப்பு இது போன்ற கேள்விக்கு இஸ்லாத்தில் ஏன் கூடாது என்றுதிருக்குர்ஆன் மற்றும் நபிகள் நாயகம் அவர்களின் போதனைகளில் இருந்து விளக்கம் அளித்தார்கள் இதில் அதிகமான மக்கள் கலந்து கொண்டனர்

இதற்கான ஏற்பாடுகளை கிளை செயலாளர் சுலைமான். பொருளாளர் முகமது மஜீத், துணைத் தலைவர் பெயிண்டர் அலி, மற்றும் துணைச் செயலாளர் இஸ்மாயில் செய்திருந்தனர் முடிவில் மருத்துவ அணி பொறுப்பாளர் இமாம் அப்துல் மஜீத் அவர்கள் நன்றியுரையுடன் நிகழ்ச்சி முடிவுற்றது.

# வாழப்பாடி அருகே மது போதையில் கொலை வழக்கில் மனநலம் பாதிக்கப்பட்டவர் கைது



வாழப்பாடி, ஜன.5

சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகே புத்திரகவுண்டம் பாளையம் ஊராட்சிக்குட்பட்ட 6வது வார்டு பகுதியை சேர்ந்தவர் பெரியசாமி (67). இவரது தம்பி சிகாமணியின் மகன் செல்வராஜ் (30) பிஎஸ்சி பட்டதாரியான செல்வராஜ் கடந்த மூன்று ஆண்டுகளாக மனநலம் பாதிக்கப்பட்டு சிகிச்சை மேற்கொண்டு வருவதாக கூறப்படுகிறது. மதுப்பழக்கமும் உள்ள செல்வராஜ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை தனது பெரியப்பா பெரியசாமியிடம் மது அருந்துவதற்கு பணம் கேட்டதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் பெரியசாமி பணம் தர மறுக்கவே இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்ட நிலையில் திடீரென வீட்டிலிருந்த கத்தியால் பெரியசாமியை வெட்டி கொலை செய்துவிட்டு அங்கேயே இருந்துள்ளார். இதுகுறித்து அப்பகுதி பொதுமக்கள் ஏத்தாப்பூர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்திற்கு வந்த ஏத்தாப்பூர் போலீசார் பெரியசாமி உடலை கைப்பற்றி உடற்க்கூறு ஆய்வுக்காக சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் செல்வராஜை கைது செய்து விசாரணை செய்ததில் கொலை செய்தது தெரியவந்துள்ளது. அதனைத் தொடர்ந்து வழக்கு பதிவு செய்து ஏத்தாப்பூர் போலீசார் ஆத்தூர் சிறையில் அடைத்தனர்.

மேலும் மனநலம் பாதிக்கப்பட்ட நபர் போதையில் தன்னது பெரியப்பாவை கழுத்தை அறுத்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# திண்டுக்கல் மணிகண்டன் அறக்கட்டளையின் சார்பாக மணிகண்டன் திருக்கோயிலில் 43ம் ஆண்டு மண்டல பூஜை, மஹா கும்பாபிஷேக விழா



திண்டுக்கல், ஜன.5

திண்டுக்கல் மணிகண்டன் அறக்கட்டளையின் சார்பாக உதயம் காலனி ஆர்.எம். காலனி, 6வது கிராஸில் அமைந்துள்ள மணிகண்டன் திருக்கோயிலில் 43 ஆம் ஆண்டு மண்டல பூஜையும், மஹா கும்பாபிஷேக விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஆன்மீகசெம்மல்ஜி.சுந்தரராஜன் ஐயா தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் திண்டுக்கல் மாநகராட்சி மேயர்இளமதி ஜோதி பிரகாஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ தூண்டில் விநாயகர், ஸ்ரீ வெற்றிவேல் முருகன், ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர், ஸ்ரீ அகத்தியர், ஸ்ரீ ராஜ நாகம்மாள், ஸ்ரீ வீர ஆஞ்சநேயர், ஸ்ரீ மஞ்சள் மாதா, ஸ்ரீ முனியப்பன், ஸ்ரீ கருப்பண்ணசாமி ஆகிய பரிவார தெய்வங்களுடன் மூலவர் ஸ்ரீ ஐயப்பன் ஆகிய தெய்வங்களுக்கு மகா கும்பாபிஷேக விழா.நிகழ்ச்சி தலைமை குருநாதர் கே. காளிமுத்து பிள்ளை தலைமையில் அனைத்து தெய்வங்களுக்கும் மண்டல பூஜை செய்து கலசத்தில் புனித நீர் ஊற்றினார்.

இந்நிகழ்ச்சியை தொடர்ந்து அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இதில் ஏராளமான பக்த கோடி பெருமக்களும், ஐயப்ப பக்தர்களும் கலந்து கொண்டு தெய்வங்களின் அருள் பெற்றுச் சென்றனர். அதனைத் தொடர்ந்து தெய்வீக பாடல்களை விஜய் டிவி புகழ் ராஜலட்சுமி செந்தில் கணேஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பாக பாடினார்கள். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மணிகண்டன் திருக்கோயில் உதயம் காலனி 6 வது கிராஸ் ஆர்.எம்.காலனி நிர்வாகிகள் சிறப்பாக செய்து இருந்தனர்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் உயர் திரு T.கிருஸ்துராஜ் அவர்கள் இடம் மனு தமிழ் நாடு அரசு ஆதி திராவிட மக்களுக்கு தாட்கோ மூலம் கடன் உதவி வழங்கப்படுகிறது அரசு தாட்கோ மூலம் கடன் வழங்க தயாராக இருந்தும் வங்கிகள் ஆதி திராவிட மக்களுக்கு கடன் வழங்க முன் வருவதில்லை ஆதிதிராவிட மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தாட்கோ மூலம் அரசு வழங்கும் கடன் உதவி அரசு வங்கிகளும் முன்வந்து தலித் மக்களுக்கு வழங்க வேண்டும் என்று திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புரட்சி பாரதம் கட்சி சார்பில் மனு அளிக்கப்பட்டது தமிழ்நாடு அரசால் அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் ஆதிதிராவிட மக்களுக்கு ஒதுக்கி தரப்பட வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் புகார் மனு அளிக்கப்பட்டது திருப்பூர் ஒருங்கிணைந்த புரட்சி பாரதம் கட்சியின் மாவட்ட செயலாளர் வீரபாண்டி செல்வம் துணை செயலாளர் எபினேசன் தெற்கு ஒன்றிய செயலாளர் ராம்கி மகளிர் அணி தெற்கு செயலாளர் சுகன்யா துணைச் செயலாளர் சரண்யா வடக்கு ஒன்றிய துணைச் செயலாளர் ஏளம்பாள் 20வார்டு செயலாளர்

# தமிழக அரசு அறிவித்த பொங்கல் போனஸ் யார் யாருக்கு வழங்கப்படும்? அரசாணை வெளியீடு

சென்னை, ஜன.5

தமிழக அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள், ஓய்வூதியதாரர்கள், குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 2023 2024ம் ஆண்டிற்கான பொங்கல் போனஸ் மற்றும் பொங்கல் பரிசை வழங்க ரூ.163.81 கோடி நிதியை ஒதுக்கீடு செய்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அதில், 'சி' மற்றும் 'டி' பிரிவை சேர்ந்த பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ரூ.3 ஆயிரம் என்ற உச்சவரம்பிற்கு உட்பட்டு மிகை ஊதியம் வழங்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த நிலையில் யார் யாருக்கு பொங்கல் பரிசு வழங்கப்படும் என்பதற்கான அரசாணையை நிதித்துறை முதன்மைச்செயலாளர் உதயச்சந்திரன் வெளியிட்டுள்ளார்.அதில் கூறப்பட்டு இருப்பதாவது:

'சி' மற்றும் 'டி' பிரிவு பணியாளர்களாக இருந்து, குறிப்பிட்ட ஊதிய விகிதங்களின்படி ஓய்வூதியம் பெறும் ஓய்வூதியதாரர்களுக்கும்; மானியம் பெறும் கல்வி நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள், முன்னாள் கிராம பணியமைப்பு உள்பட அனைத்து வகை தனி ஓய்வூதியதாரர்கள், அதாவது 1.10.2017 முதல் சிறப்பு ஓய்வூதியமாக ரூ.2 ஆயிரம் பெறும் சத்துணவு அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், குறுஅங்கன்வாடி பணியாளர்கள்,

சத்துணவு சமையலர்கள், சமையல் உதவியாளர்கள், அங்கன்வாடி உதவியாளர்கள், ஊராட்சி செயலர்,கிராமநூலகர்கள், பெருக்குபவர்கள் அல்லது துப்புரவுப் பணியாளர்கள் அல்லது துப்புரவாளர்கள், தோட்டக் காவலர், வேட்டைத் தடுப்பு காவலர், காவல் நிலைய துப்புரவாளர்கள் மற்றும் ஆயா உள்பட மற்றும் அனைத்து குடும்ப ஓய்வூதியதாரர்கள் ஆகியோருக்கு ஒட்டு மொத்த பொங்கல் பரிசுத் தொகையாக ரூ.500 வழங்கி அரசு ஆணையிடுகிறது.

இந்த அரசாணை தற்காலிக ஓய்வூதியம் பெறும் அனைத்து 'சி' மற்றும் 'டி' பிரிவு ஓய்வூதியதாரர்களுக்கும் பொருந்தும். இந்தப் பொங்கல் பரிசுத் தொகை, 2.1.2025 நாளன்றோ அல்லது அதற்குப் பின்னரோ பணியிலிருந்து ஓய்வுபெறும் பணியாளர்களுக்கு அனுமதிக்கத்தக்கதல்ல.

உலேமா உதவித் தொகைகள், மாநில சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான உதவித் தொகை பெறுபவர்கள், புகழ்பெற்ற அறிஞர்கள் மற்றும் சிறந்த மனிதர்களுக்கான சமூக உதவித் தொகைகள் பெறும் சிறப்பு ஓய்வூதியதாரர்கள், பணியில் இருக்கும் பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய தற்காலிக மிகை ஊதியம் (தற்காலிக போனஸ்) பெறுகிற கருணை அடிப்படையில் நியமனம் பெற்றுள்ள குடும்ப ஓய்வூதியதாரர்கள்,

'ஏ' மற்றும் 'பி' பிரிவு பதவிகளில் இருந்து ஓய்வு பெற்ற அனைத்து அரசு ஓய்வூதியதாரர்கள், அனைத்திந்திய பணி அலுவலர்கள், பல்கலைக்கழக மானியக் குழு அல்லது அனைத்திந்திய தொழில்நுட்பக் கல்விக் குழு அல்லது இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் ஆகியவற்றின் கட்டுப்பாட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள அலுவலர்கள் உள்பட ஓய்வூதிய முன்னோடித் திட்டத்தின் கீழ் வரும் ஓய்வூதியதாரர்கள்குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகை வழங்குவதற்கு சில நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். இந்தப் பொங்கல் பரிசுத் தொகை அரசு செலவில் பணவிடை மூலம் அனுப்பப்பட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் 10ந்தேதி சொர்க்கவாசல் திறப்பு



சென்னை, ஜன.5

மகத்துவம் வாய்ந்த மார்கழியில் முக்கிய நிகழ்வான வைகுண்ட ஏதாதசியையொட்டி பெருமாள் கோவில்களில் சொர்க்கவாசல் திறப்பு வரும் 10 ந்தேதி நடக்கிறது. இதையொட்டி 108 திவ்ய தேசங்களில் ஒன்றான சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கான முன்னேற்பாடு பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆய்வு செய்தார். அதனை தொடர்ந்து நிருபர்களுக்கு அவர் பேட்டி அளித்தார். அப்போது அவர்கூறியதாவது:

பார்த்தசாரதி கோவிலில் இந்த ஆண்டு வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு 10 மற்றும் 11 ஆகிய இரண்டு நாட்களில் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. வைகுண்ட ஏகாதசி அன்று சொர்க்கவாசல் காலை 4.30 மணிக்கு திறக்கப்படும். அதற்கான தரிசனக் கட்டண சீட்டு ரூ.500க்கு ஆன்லைன் மூலம் வருகின்ற 6ந் தேதி பெற்று கொள்ளலாம்.

1,500 கட்டணச் சீட்டுகள் ஆன்லைன் மூலம் வழங்கப்படும். மேலும், 500 நபர்கள் முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் சொர்க்க வாசல் தரிசனம் செய்ய கட்டணமின்றி அனுமதிக்கப்படுவார்கள். சொர்க்கவாசல் நிகழ்வுக்கு பிறகு நடக்கும் தரிசன நிகழ்வுக்கு சிறப்பு தரிசன கட்டணம் ரத்து செய்யப்படுகிறது.

முதியோர்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் கர்ப்பிணிகள் வைகுண்ட ஏகாதசி அன்று காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் 4 மணி வரையிலும் கோவிலின் பின்கோபுர வாசல் வழியாக சாமி தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

காவல்துறை சார்பில் 3 துணை கமிஷனர்கள் தலைமையில் உதவி கமிஷனர்கள், இன்ஸ்பெக்டர்கள் என ஒரு முறைக்கு 600 போலீசார் வீதம் 3 முறைகளில் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர். கோவிலின் சுற்றுப்புறங்களில் 32 கண்காணிப்பு கேமராக்கள் கூடுதலாக பொருத்தப்பட உள்ளன.

கோவிலில் 5 இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். 2 ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். அனைத்து பக்தர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாட்டில்கள் வழங்கப்படும். கோவில் தெப்பக்குளம் அருகிலும் மற்றும் நரசிம்மர் சன்னதி பின்புறமும் 20 தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்படுகிறது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கோபிசெட்டிபாளையத்தில் 3 ஆயிரம் கடைகள் அடைப்பு



கோபி, ஜன.5

நகராட்சியில் டிரேடு லைசென்ஸ் என்ற பெயரில் வருடம் தோறும் ஆயிரம் முதல் 5 ஆயிரம் வரை விதித்துள்ள கட்டணத்தை குறைக்க வேண்டும். கடை மற்றும் வீட்டு வாடகைக்கு 18 சதவீதம் ஜி.எஸ்.டி வரி விதிப்பை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மின்சார கணக்கெடுப்பை மாதம் ஒருமுறை என்பதை நடைமுறைப்படுத்த வேண்டும் உள்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி கோபி செட்டிபாளையம் ஆல் டிரேடர்ஸ் அசோசியேசன் சார்பில் கோபிசெட்டிபாளையம் பகுதியில் இன்று ஒருநாள்கடை அடைப்பு போராட்டம் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி கோபிசெட்டிபாளையம் பகுதியில் 90 சதவீதம் அதாவது 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகள் அடைக்கப்பட்டு இருந்தன. இதனால் கோபிசெட்டிபாளையம் பஸ் நிலையம் வெறிச்சோடி காணப்பட்டது.பஸ் நிலையப் பகுதியில் உள்ள அனைத்து கடைகளும் அடைக்கப்பட்டு இருந்தன.

இதே போல் கடைவீதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட ஓட்டல்கள், மளிகை கடைகள், நகைக் கடைகள், ஜவுளிக்கடைகள் அடைக்கப்பட்டு இருந்தன. கடையடைப்பு போராட்டம் காரணமாக கோடிக்கணக்கான வர்த்தகம் முடங்கியது. இதே போல் கோபிசெட்டிபாளையத்தில் இன்று காலை முதல் மாலைவரைதியேட்டரில் காட்சிகள் ரத்து செய்யப்பட்டிருந்தன.

# கலெக்டர் அலுவலகம் முன்பு தொழிலாளி தீக்குளிப்பு



செங்கல்பட்டு. ஜன.5

திரிசூலம் வைத்தியர் தெருவை சேர்ந்தவர் பாபு (வயது45). தொழிலாளி. இவருக்கும் பக்கத்தில் வீட்டில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் இடையே இடம் தொடர்பாக அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இதில் அவர்கள் கொலை மிரட்டல் விடுத்து வந்ததாக கூறப்படுகிறது.

இதுகுறித்து ஏற்கனவே பல்லாவரம் போலீசில் புகார் செய்யப்பட்டது. போலீசார் இருதரப்பினரையும் அழைத்து சமாதானம் பேசி அனுப்பிஉள்ளனர். இந்த நிலையில் பாபுவுக்கு மீண்டும் பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் மிரட்டல் விடுத்ததாக தெரிகிறது. இது தொடர்பாக அவர் செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் அலுவலகத்திலும் புகார் தெரிவித்து இருந்தார்.

இதற்கிடையே இன்று காலை செங்கல்பட்டு கலெக்டர் அலுவலகத்திற்கு பாபு வந்தார். திடீரென அவர் கலெக்டர் அலுவலகம் முன்பு நின்றபடி தனது உடலில் பெட்ரோலை ஊற்றி தீக்குளித்தார். இதில் உடல் கருகிய அவர் எரியும் தீயுடன் அங்கும் இங்கும் ஓடினார். இதனை கண்டு அருகில் நின்றவர்கள் பதறியடித்து ஓட்டம் பிடித்தனர். கலெக்டர் அலுவலகத்தில் இருந்த ஊழியர்களும், பொதுமக்களும் அதிர்ச்சியில் உறைந்தனர். இதனால் கலெக்டர் அலுவலகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

அங்கிருந்த சிலர் பாபுவின் உடலில் பற்றிய தீயை அணைத்து மீட்டனர். பின்னர் உடல்கருகிய அவரை சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு பாபுவுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது குறித்து போலீசார் தீவிர விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# யானை தந்தம் வெட்டி கடத்தி விற்க முயன்ற கும்பல்



மேட்டூர், ஜன.5

சேலம் மாவட்டம் மேட்டூர் அருகே உள்ள கொளத்தூர் பகுதியில் யானை தந்தங்கள் விற்பனைக்கு பதுக்கி வைத்திருப்பதாக வனத்துறையினருக்கு ரகசிய தகவல் கிடைத்தது.

இதையடுத்து மேட்டூர் வனச்சரகர் சிவானந்தம் தலைமையில் வனத்துறையினர் சோதனை சாவடி, வனப்பகுதியையொட்டியுள்ள பகுதிகளில் மாறுவேடத்தில் கண்காணிப்பு பணியை தீவிரப்படுத்தினர். அதில் யானை தந்தம் கடத்தல் கும்பலை சேர்ந்த ஒருவர் சிக்கினார். அவர் யானை தந்தம் கடத்தல் குறித்து திடுக்கிடும் தகவல் வனத்துறையினரிடம் தெரிவித்தார். இதையடுத்து ஒட்டு மொத்த கும்பலையும் பிடிக்க வனத்துறையினர் திட்டம் தீட்டினர்.

அதன்படி அவர் மூலமாக வனத்துறையினர் தந்தங்களை விலைக்கு வாங்குவது போல் பேசி கடத்தல் கும்பலை கொளத்தூரை அடுத்த ஏழரை மரத்துக்காடு என்ற இடத்திற்கு வரவழைத்தனர்.

இதையடுத்து சொகுசு காரில்யானைதந்தங்களை எடுத்துக்கொண்டு 3 பேர் ஏழரை மரத்துக்காடு பகுதிக்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு பாதுகாப்பாககாருக்குமுன்னும் பின்னும் நோட்டமிட்டபடி 2 பேர் மோட்டார் சைக்கிளில் வந்தனர். குறிப்பிட்ட இடத்திற்கு சொகுசு கார் வந்தவுடன் மாறுவேடத்தில் நின்ற வனத்துறையினர் காரை நிறுத்தி யானை தந்தங்களை கொண்டு வருமாறு சைகை காட்டினர். இதையடுத்து யானை தந்தங்களுடன் காரும், மோட்டார் சைக்கிளில் வந்தவர்களும் அருகில் வந்தனர்.

அப்போது அங்கு தயார் நிலையில் இருந்த வனத்துறையினர் கடத்தல் கும்பலை சுற்றி வளைத்து பிடித்தனர். அவர்களிடம் இருந்து 7 கிலோ எடை கொண்ட 4 யானைதந்தம், ஒரு சொகுசு கார், 2 மோட்டார் சைக்கிள்கள் பறிமுதல் செய்யப்பட்டது.

விசாரணையில் தந்தங்களை காரில் கடத்தி வந்தவர்கள் மேட்டூர் அருகே உள்ள கோவிந்தபாடியை சேர்ந்த பழனி (வயது 48), தலைவாசல் பகுதியை சேர்ந்த செல்வகுமார்(40), குரும்பனூரை சேர்ந்த பெருமாள் (50), ஏழரை மரத்துக்காடு பகுதியை சேர்ந்த ஒண்டியப்பன் (59), வாழப்பாடியைச் சேர்ந்த அருணாசலம் (45) ஆகிய 5 பேர் என்பது தெரியவந்தது. அவர்களை வனத்துறையினர் கைது செய்து மேட்டூர் வனத்துறை அலுவலகத்திற்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

பறிமுதல்செய்யப்பட்ட தந்தங்கள் அனைத்தும் 20 ஆண்டுகளுக்கு முன்பு மேட்டூர் அருகே அடர்ந்த வனப்பகுதியில் இறந்து கிடந்த யானைகளிடம் இருந்து வெட்டி எடுக்கப்பட்டதாக விசாரணையில் தெரிவித்தனர்.

இந்த வனப்பகுதியில் வீரப்பன் கும்பல் யானை தந்தம் கடத்தியதாக கூறுவது உண்டு.

வீரப்பனுக்கு அடுத்து தற்போதுமீண்டும்யானை தந்தம் கடத்தல் தலை தூக்கியுள்ளதால் வனத்துறையினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பறிமுதல் செய்யப்பட்ட யானை தந்தங்களை எத்தனை ஆண்டுகளுக்கு முறப்பட்டது என கண்டுபிடிக்க ஆய்வுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# ஆரணி பேரூராட்சியுடன் மல்லியங்குப்பம் ஊராட்சியை இணைக்க எதிர்ப்பு



பெரியபாளையம், ஜன.5

சோழவரம் ஒன்றியத்துக்கு உட்பட்டது மல்லியங்குப்பம் ஊராட்சி. இங்கு சுமார் 4 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இந்த நிலையில், மல்லியங்குப்பம் ஊராட்சியை ஆரணி பேரூராட்சியுடன் இணைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இது தொடர்பான அறிவிப்பு வெளியாகி உள்ளது.

இந்நிலையில், மல்லியங் குப்பம் ஊராட்சியை ஆரணி பேரூராட்சியுடன் இணைத்தால் 100 நாள் வேலை திட்டம் பறிபோகும். வீட்டு வரி,தொழில் வரி உள்ளிட்ட வரி உயர்வுகள் ஏற்படும். இதனால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து கிராமமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகிறார்கள்.

நேற்று மதியம் மல்லியங்குப்பம் ஊராட்சியை சேர்ந்த 100க்கும் மேற்பட்டோர் புதுவாயல்பெரியபாளையம் நெடுஞ்சாலையில் ஆரணி மார்க்கெட் பகுதியில் திடீர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களிடம் அதிகாரிகள் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து போகச் செய்தனர்.

இதைத்தொடர்ந்து மல்லியங்குப்பம் கிராமமக்கள் தங்களது கிராமத்தை ஆரணி பேரூராட்சியுடன் இணைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் டாக்டர் பிரபு சங்கர் மற்றும் ஊரக வளர்ச்சி உதவி இயக்குனர் பரணி ஆகியோரை நேரில் சந்தித்து கோரிக்கை மனு அளித்தனர்.

அப்போது கலெக்டர் பிரபுசங்கர் கூறும்போது, பிப்ரவரி 9ந் தேதிக்குள் சட்டமன்ற உறுப்பினர் மற்றும் வருவாய் துறை கருத்து கேட்பு கூட்டம் உள்ளிட்ட நடைமுறை விதிகள் மேற்கொள்ளப்படும். உங்களது கோரிக்கை மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

# கழிவுநீர் தொட்டியில் விழுந்து சிறுமி உயிரிழப்பு: பள்ளி நிர்வாகம் முன்னுக்கு பின் முரணாக தகவல் அடுக்கடுக்காக எழும் கேள்விகள்



விழுப்புரம், ஜன.5

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியில் உள்ள தனியார் பள்ளியில் UKG படித்து வந்த சிறுமி லியா லெட்சுமி கழிவுநீர் தொட்டியில் விழுந்து உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குழந்தை கழிவுர் நீர் தொட்டியில் விழுந்தது தொடர்பான தங்களிடம் பள்ளி நிர்வாகம் உடனடியாக தகவல் தெரிவிக்கவில்லை. 3 மணிக்கு பிறகு தான் தகவல் தெரிவித்ததாக பெற்றோர் பள்ளி நிர்வாகம் மீது குற்றம் சாட்டியுள்ளனர்.

லஞ்ச்முடிந்து 2 மணிக்கு தேர்வு தொடங்கியது. சிறுமி மதியம் 2 மணிக்கு ரெஸ்ட் ரூம் செல்ல வேண்டும் எனக் கூறி வக்குப்பறையில் இருந்த வெளியேறினார். 2.05 வரை சிறுமி திரும்பாததால் ஆசிரியர் ரெஸ்ட் ரூம் சென்று பார்த்தபோது சிறுமி அங்கு இல்லாததால் தேட ஆரம்பித்தார்கள்.

எல்லா வகுப்பறையிலும் பார்த்தோம். எங்கேயும் இல்லை. பின்னர் கழிவுநீர் தொட்டி அருகே சென்று பார்க்கும்போது, கம்பி வலை எடுக்கப்பட்டிருந்தது. உடனே கழிவு நீர் தொட்டியை பார்க்கும்போது உள்ளே சிறுமியின் செருப்பு கிடந்தது. இதனைத் தொடர்ந்து கழிவுநீர் தொட்டியில் பார்க்கும்போது குழந்தை உள்ளே விழுந்தது தெரிய வந்து மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம் என தலைமை ஆசிரியர் கூறுகிறார்.

மதியம் 2 மணிக்குப் பிறகே ரெஸ்ட் ரூம் செல்வதற்காக வகுப்பறையை விட்டு வெளியே சென்றதாக தலைமை ஆசிரியர் கூறிய நிலையில், சிறுமியை ஒருவர் தூக்கிக் கொண்டு அங்கும் இங்கும் செல்லும் சிசிடிவி காட்சியில் 1.50 எனக் காட்டுகிறது.

ஆனால் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் சிசிடிவியில் 2.40 மணி எனக் காட்டுகிறது. குழந்தையை கழிவுநீர் தொட்டியில் இருந்து தூக்கிய பிறகு சுமார் ஒரு மணி நேரம் தாமதம் ஏன்? என்ற கேள்வி எழும்புகிறது.

மேலும், கழிவு நீர் மேடான பகுதியில் உள்ளது. UKG சிறுமியால் மேடான பகுதியில் ஏற முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது?

அத்துடன் சிறுமியின் ஆடை நணையாமல் இருந்துள்ளது. கழிவுநீர் தொட்டியில் விழுந்தால் எப்படி ஆடை நணையாமல் இருக்கும். மேலும், கழிவுகள் ஆடையில் ஒட்டாமல் இருக்குமா?. ஆடையில் கழிவு ஒட்டியதற்கான அடையாளம் இல்லை.

குழந்தையை தூக்கிச் செல்லும் நபர் எந்தவித பதற்றமின்றி சாதாரணமாக தூக்கிச் செல்கிறார். குழந்தையை மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் காட்சி மட்டுமே சிசிடிவி காட்சியில் இடம் பெற்றுள்ளது.

தலைமை ஆசியர் கூறியதற்கும் சிசிடிவி காட்சியில் தெரியும் நேரத்திற்கும் மாறுபாடு உள்ளது. சிறுமி உயிரிழப்பு தொடர்பாக பள்ளி நிர்வாகம் முன்னுக்கு பின் முரண் தகவலை தெரிவிப்பதாகவும், சிறுமி உயிரிழப்பு தொடர்பாக பல்வேறு கேள்விகளை எழுப்புவதாகவும் பெற்றோர் மற்றும் உறவினர்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

## மத்திய அரசின் நிகழ்ச்சியில் உதவியாளரை ஒருமையில் திட்டிய அமைச்சர்

சென்னை, ஜன.5

தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது முதல், அமைச்சர்களின் நடவடிக்கைகளால் விமர்சனங்களை பெற்று வருகிறது. மகளிர் விடியல் பயணம் தொடர்பாக பேசும்போது அமைச்சர் பொன்முடி 'ஓசி பயணம்' என்று கூறியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதையடுத்து, பாரதிய ஜனதா கட்சியைச் சேர்ந்த திரைப்பட நடிகைகள் குஷ்பு, நமீதா, காயத்ரி ரகுராம் , கௌதமி ஆகியோர் குறித்து திமுகவைச் சேர்ந்த சைதை சாதிக் சர்ச்சைக்குரிய வகையில் பேசியதும் பின்பு அதற்காக மன்னிப்பு கேட்டதும் நடைபெற்றது.

சமீபத்தில், ஒரு சமூகத்தை குறிப்பிட்டு ஆண்ட பரம்பரை என அமைச்சர் மூர்த்தி பேசிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



இந்த நிலையில், தஞ்சாவூரில் மத்திய அரசு சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற வேளாண்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் உதவியாளரை ஒருமையில் பேசியுள்ள சம்பவம் சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது. பொதுமேடையில் அமைச்சர் தனது உதவியாளரை ★★★மாடா நீ என திட்டியதால் சலசலப்பு ஏற்பட்டது.

## விமானத்தில் கடத்தி வந்த ரூ.3½ கோடி உயர்ரக கஞ்சா பறிமுதல் பயணி கைது



ஆலந்தூர், ஜன.5

தாய்லாந்து நாட்டு தலைநகர் பாங்காக்கில் இருந்து சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு பயணிகள் விமானம் வந்தது. அதில் வந்த பயணிகளிடம் சுங்க அதிகாரிகள் சோதனை நடத்தினர்.

அப்போது சென்னையைச் சேர்ந்த சுமார் 35 வயது ஆண் பயணி ஒருவர் சுற்றுலாப் பயணியாக தாய்லாந்து நாட்டிற்கு சென்றுவிட்டு திரும்பி வந்தார். அவரது நடவடிக்கையில் சந்தேகம் அடைந்த அதிகாரிகள் அவரது உடைமைகளை சோதனை செய்தனர். சூட்கேசுக்குள் மறைத்து வைத்திருந்த 7 பார்சல்களை பிரித்துப் பார்த்தபோது பதப்படுத்தப்பட்ட ஹைட்ரோபோனிக் உயர்ரக கஞ்சா கடத்தி வந்து இருப்பதை கண்டுபிடித்தனர். மொத்தம் 3½ கிலோ ஹைட்ரோபோனிக் கஞ்சா இருந்தது. இதன் சர்வதேச மதிப்பு ரூ.3½ கோடி ஆகும்.

இதையடுத்து கஞ்சா கடத்தி வந்த பயணியை கைது செய்து உயர்ரக கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

சென்னை விமான நிலையத்தில் ஏற்கனவே கடந்த 2 நாட்களுக்கு முன்பு இதே போல் தாய்லாந்து நாட்டில் இருந்து கடத்திக் கொண்டு வரப்பட்ட ரூ.6 கோடி மதிப்புடைய, 6 கிலோ ஹைட்ரோபோனிக் உயர் ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு, வடமாநில இளம்பெண் கைது செய்யப்பட்டு இருந்தார்.

இந்த நிலையில், தற்போது மீண்டும் தாய்லாந்து நாட்டில் இருந்து, கடத்தி வரப்பட்ட ரூ.3½ கோடி மதிப்புடைய ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு உள்ளது.

சென்னை விமான நிலையத்தில் அடுத்தடுத்து 2 நாட்களில் ரூ.9.5 கோடி மதிப்புடைய 9.5 கிலோ ஹைட்ரோபோனிக் உயர ரக கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு உள்ள சம்பவம் அதிகாரிகளை அதிர்ச்சி அடைய செய்து உள்ளது.

## பாலமேடு ஜல்லிக்கட்டு முகூர்த்தக்கால் நட்டு பணிகளை தொடங்கி வைத்தார் அமைச்சர் மூர்த்தி

மதுரை, ஜன.5

தமிழர் திருநாளாம் தைப் பொங்கலை முன்னிட்டு மதுரை மாவட்டம் அவனியாபுரம், பாலமேடு மற்றும் அலங்காநல்லூரில் தமிழக அரசு சார்பில் ஆண்டுதோறும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.

தமிழகம் முழுவதும் இருந்து சிறந்த காளைகள் பங்கேற்கும் இந்த ஜல்லிக்கட்டு போட்டிகள் உலக புகழ் பெற்றதாக கொண்டாடப்படுகிறது.

பொங்கல் பண்டிகை நாளில், தமிழகத்தின் முதல் ஜல்லிக்கட்டு போட்டியாக அவனியாபுரம் ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும்.



இந்த ஆண்டு முதல் போட்டி வரும் ஜனவரி 14ம் தேதி அவனியாபுரத்தில் நடக்கிறது. இதனையடுத்து வரும் 15ஆம் தேதி பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டிக்கான வாடிவாசல், பார்வையாளர்கள் அமருவதற்கு கேலரிகள், மாடு சேகரிக்கும் இடம் அமைப்பதற்கான முகூர்த்த கால் நடும் விழா இன்று நடந்தது. வணிகவரித்துறை அமைச்சர் பி.மூர்த்தி, முகூர்த்த கால் நட்டு ஜல்லிக்கட்டு விழா ஏற்பாடு பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் அமைச்சர் பி.மூர்த்தி செய்தியாளரிடம் கூறுகையில்,


அலங்காநல்லூர் அருகே கலைஞர் ஏறுதழுவுதல் அரங்கில் தனியார் ஏற்பாடு செய்யும் ஜல்லிக்கட்டு அல்லது கிரிக்கெட் போன்றவற்றை நடத்தலாம். தற்போதுமாமதுரைஅமைப்பின் சார்பாக நடத்தப்படும் நிகழ்ச்சிக்கு, பொதுப்பணித்துறை மூலம் ஒப்பந்தப்புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.

ஜல்லிக்கட்டு போட்டிகளுக்கு வழக்கம்போலவே வீரர்களும், காளை உரிமையாளர்களும் இணைய வழியில் விண்ணப்பிக்க வேண்டும். இதில் பதிவாகும் எண்ணிக்கை அடிப்படையில், காளைகள் அவிழ்க்கப்படும்.

இதுகுறித்த அறிவிப்பை கலெக்டர் விரைவில் வெளியிடுவார் என்றார்.

இதனிடையே அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு ஜன.16ம் தேதி நடைபெறும் என்று விழாக்குழு அறிவித்துள்ளது.

## ஜே.இ.இ. முதன்மை தேர்வு 22ந்தேதி தொடக்கம் கால அட்டவணை வெளியீடு



சென்னை, ஜன.5

ஐ.ஐ.டி., என்.ஐ.டி. போன்ற மத்திய உயர் கல்வி நிறுவனங்களில் இளநிலை படிப்புகளில் சேர, ஒருங்கிணைந்த நுழைவுத் தேர்வில் (ஜே.இ.இ.) தேர்ச்சி பெற வேண்டும். இதுஜே.இ.இ. முதன்மை தேர்வு. பிரதான தேர்வு என 2 பிரிவாக நடைபெறுகிறது.

இதில் முதன்மை தேர்வை தேசிய தேர்வுகள் முகமை (என்.டி.ஏ.) ஆண்டுதோறும் 2 கட்டங்களாக நடத்தி வருகிறது. அதன்படி 202526ம் கல்வி ஆண்டுக்கான ஜே.இ.இ. முதல் கட்ட முதன்மை தேர்வு 22ந்தேதி முதல் 30ந்தேதி வரை நடத்தப்பட உள்ளது.

இதற்கான இணையதள விண்ணப்ப பதிவு கடந்த அக்டோபர் 28ந்தேதி தொடங்கி நவம்பர் 22ந்தேதியுடன் நிறைவு பெற்றது. தேர்வு எழுத ஏராளமானோர் விண்ணப்பித்துள்ளனர்.

இந்த நிலையில் எந்தெந்த நாளில் தேர்வுகள் நடைபெறும் என்ற விரிவான கால அட்டவணையை என்.டி.ஏ. தற்போது வெளியிட்டுள்ளது. அதன்படி பி.இ., பி.டெக். படிப்புக்கான முதல் தாள் தேர்வு 22, 23, 24, 28, 29ந்தேதிகளில் காலை, மாலை என இரு வேளையாக நடத்தப்படும். அதேபோல், பி.ஆர்க், பி.பிளானிங் படிப்புக்கான 2ம் தாள் தேர்வு 30 ந்தேதி மாலை நடைபெற உள்ளது.

இது பற்றிய விவரங்களை jeemain.nta.nic.in இணையதளம் வாயிலாக மாணவர்கள் அறிந்து கொள்ளலாம். தமிழ், ஆங்கிலம், இந்தி உள்பட 13 மொழிகளில் தேர்வு நடைபெறும். இதன் முடிவுகள் பிப்ரவரி 12ந்தேதி வெளியிடப்படும். ஹால் டிக்கெட் வெளியீடு உள்ளிட்ட இதர தகவல்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இது குறித்த கூடுதல் விவரங்களை nta.ac.in என்ற இணையதளத்தில் அறியலாம். மாணவர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் 011 40759000/69227700 என்ற தொலைபேசி எண் அல்லது Jeemain.nta.ac.in எனும் மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறலாம் என்று என்.டி.ஏ. வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரிட்டாபட்டி பகுதியில் ஒரு பிடி மண்ணைக் கூட எடுக்க விட மாட்டோம்: வைகோ உறுதி

மேலூர், ஜன.5

மதுரை மாவட்டம் மேலூர் பஸ் நிலையம் முன்பாக, டங்ஸ்டன் சுரங்க திட்டத்தைக் கண்டித்து, ம.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

புறநகர்வடக்குமாவட்ட செயலாளர்மார்நாடு ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். பூமிநாதன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். துணை பொதுச் செயலாளர்கள் மல்லை சத்யா, ரொகையா, மாநில பொருளாளர் செந்திலதிபன் உள்பட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தில் டங்ஸ்டன் சுரங்க திட்டத்திற்கு எதிராக கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.



கடந்த ஒரு ஆண்டு காலமாக, உடல்நிலை சரியில்லாத காரணத்தால், எந்த போராட்டத்திலும் கலந்து கொள்ள வில்லை. உங்களில் ஒருவரான நான் தமிழகத்தில் பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டேன். ஸ்டெர்லைட், மீத்தேன், முல்லைப் பெரியாறு உள்ளிட்ட மக்கள் பிரச்னைகளில் போராட்டம் நடத்தியுள்ளேன்.

முல்லை பெரியாறு அணையை காக்க, 10 லட்சம் விவசாயிகளுடன் நடைபயணம் மேற்கொண்டேன். இதில் கட்சி வேறுபாடின்றி, பல்வேறு தரப்பினர் என்னை வரவேற்றனர். ஒத்தக்கடை யானை மலை பகுதியில் சிற்ப நகர் அமைக்கும் திட்டத்திற்கு எதிராக நான் போராடியதால், மாற்றுக் கருத்து கொண்டிருந்தாலும், எனது கோரிக்கையை ஏற்று அப்போதைய முதல்வர் கருணாநிதி, திட்டத்தை ரத்து செய்தார்.

தற்போது, வேதாந்தா நிறுவனத்தின் துணை நிறுவனமான இந்துஸ்தான் ஜிங்க் நிறுவனம் அரிட்டாப் பட்டியில் 5000 ஏக்கரில் டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை செயல்படுத்த முயற்சிக்கிறது.

அரிட்டாப்பட்டி பகுதி 3000 ஆண்டு பழமையான பகுதி. மலைகள், சமணர் படுகை, பல்லுயிர் தலம், குடைவரை கோவில்கள் உள்ள பகுதி. ம.தி.மு.க. இருக்கும் வரை இங்கு ஒரு பிடி மண்ணை கூட எடுக்க விட மாட்டோம். விரைவில் இந்த பிரச்னை தொடர்பாக அடுத்த கட்ட போராட்டத்தை அறிவிப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

## ஜமைக்காவில் சுட்டுக்கொல்லப்பட்ட வாலிபர் பிரேத பரிசோதனை முடிந்த நிலையில் அடுத்த வாரம் நெல்லை வரும் உடல்

நெல்லை, ஜன.5

ஜமைக்கா நாட்டில் தென்காசி மாவட்டம் சுரண்டையை சேர்ந்த சுபாஷ் அமிர்தராஜ் என்பவர் சூப்பர் மார்க்கெட் நடத்தி வருகிறார். இந்த சூப்பர் மார்க்கெட்டில் நெல்லை சந்திப்பு மீனாட்சி புரம் புளியந்தோப்பு நடுத்தெருவை சேர்ந்த நாகராஜன் என்பவரது மகன் விக்னேஷ் (31) என்பவர் ஓராண்டுக்கு மேலாக சூப்பர்வைசராக வேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் அந்நாட்டில் கடந்த மாதம் 18ந்தேதி அதிகாலையில் சூப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்து கொள்ளையர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் விக்னேஷ் மீது குண்டு பாய்ந்து அவர் சம்பவ இடத்திலேயே பலியானார். அவருடன் வேலை பார்த்த மேலும் 2 பேர் காயமடைந்தனர். இதையறிந்த அவர்களின் உறவினர்கள் கடும் அதிர்ச்சி அடைந்தனர்.



விக்னேஷின் உறவினர்கள் அவரது உடலை விரைந்து இந்தியா அனுப்ப அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி நெல்லை கலெக்டர் அலுவலகத்திற்கு சென்று தச்சை பகுதி தி.மு.க. செயலாளர் தச்சை சுப்பிரமணியன் தலைமையில் மனு அளித்தனர். எம்.பி ராபர்ட் புரூஸ் விக்னேஷின் உடல் விரைவில் தாயகம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த நிலையில் விக்னேஷ் உயிரிழந்து 15 நாட்களுக்கு மேல் ஆகியும் அவரது உடல் தாயகம் கொண்டு வரப்படவில்லை. இதனால் அவரது உறவினர்கள் கடும் சோகத்தில் உள்ளனர்.

இதுகுறித்த விக்னேஷின் உறவினர்கள் கூறுகையில், விக்னேஷின் உடலுக்கு நேற்று தான் பிரேத பரிசோதனை நிறைவு பெற்றதாக அந்நாட்டில் இருந்து எங்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அங்கிருந்து விக்னேஷின் உடல் விமானம் மூலம் தாயகம் கொண்டு வர ரூ.16 லட்சம் வரை செலவாகும் என தெரிவித்துள்ளார்கள். அது தொடர்பாக பேசி வருகிறோம். அடுத்த வாரத்தில் விக்னேஷின் உடல் நெல்லைக்கு கொண்டு வரப்படும் என நம்புகிறோம் என்றனர்.

## படப்பையில் 9ந்தேதி அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் எடப்பாடி அறிவிப்பு

சென்னை, ஜன.5

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

வண்டலூர் வாலாஜாபாத் சாலை படப்பையில் ஆமை வேகத்தில் நடைபெற்று வரும் மேம்பாலப் பணிகளை விரைந்து முடிக்க வலியுறுத்தியும், சமீபத்தில் ஃபெஞ்சல் புயலால் ஏற்பட்ட கனமழை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு உரிய நிவாரணம் வழங்காத; கடுமையாக அதிகரித்துள்ள விலைவாசி உயர்வு, கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு ஆகியவற்றைக் கட்டுப்படுத்தாத தி.மு.க. அரசைக் கண்டித்தும்;

குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட இடங்களில் குண்டும் குழியுமாக உள்ள சாலைகளை சீரமைக்காத, குடிநீர் வசதிகளை முழுமையாக ஏற்படுத்தாத குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தைக் கண்டித்தும், அ.தி.மு.க. காஞ்சிபுரம் மாவட்டத்தின் சார்பில் வருகிற 9ந்தேதி (வியாழக்கிழமை) காலை 10 மணியளவில், படப்பையில் உள்ள குன்றத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம் கழக மகளிர் அணிச் செயலாளரும், கழக செய்தித் தொடர்பாளரும், முன்னாள் அமைச்சருமான பா. வளர்மதி தலைமையிலும்; காஞ்சிபுரம் மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான சோமசுந்தரம், குன்றத்தூர் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளரும், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ.வுமான மதனந்தபுரம் பழனி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த கழக பிரதிநிதிகள், வியாபாரிகள், பல்வேறு தரப்பட்ட தொழிலாளர்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அனைவரும் பெருந்திரளான அளவில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

## ஆட்டு மந்தைகளுக்கு இடையே அடைக்கப்பட்ட பா.ஜ.க.வினர் துர்நாற்றம் வீசுவதாக புகார்

சென்னை, ஜன.5

அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நேர்ந்த கொடுமையை கண்டித்தும், குற்றவாளி தி.மு.க.வை சேர்ந்தவர் என்பதால் முழு உண்மையையும் வெளிக்கொண்டு வராமல் மறைக்க தி.மு.க. அரசு முய ற்சியை செய்வதை கண்டித்தும், தமிழ்நாடு பா.ஜ.க. மகளிரணி சார்பில் மதுரை சிம்மக்கல் பகுதியில் இருந்து இன்று பிரமாண்ட பேரணி நடைபெற்றது.

முன்னதாக அங்குள்ள செல்லத்தம்மன் கோவிலில் மதுரை மாவட்ட பா.ஜ.க. மகளிரணி தலைவி ஓம்சக்தி தனலட்சுமி தலைமையில் மகளிரணியை சேர்ந்த 7 பேர் கையில் தீச்சட்டி ஏந்தி கோவில் வளாகத்தை சுற்றி வந்தனர்.

மேலும் கண்ணகி நீதி கேட்டு போராடியபோது



அம்மனுக்கு மிளகாய் வற்றல் அரைத்து பூசிய நிகழ்வை எடுத்துரைக்கும் வகையில் மகளிர் அணியினர் மிளகாய் வற்றல் அரைத்தனர். அதேபோல் நிர்வாகிகள் கண்ணகி நீதி கேட்டு போராடியை நினைவூட்டும் வகையில் கையில் சிலம்பு ஏந்தி வந்தனர்.

தொடர்ந்து டிராக்டரில் தொடங்கிய பேரணிக்கு மாநில மகளிரணி தலைவர் உமாரதி ராஜன் தலைமை தாங்கினார். பா.ஜ.க. தேசிய செயற்குழு உறுப்பினர் குஷ்பு பேரணியை தொடங்கி வைத்தார். இதில் தமிழகம் முழுவதிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான மகளிரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இதையடுத்து அவர்கள் அனைவரும் கைதுசெய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட குஷ்பு உள்ளிட் பா.ஜ.க. மகளிரணியினர் ஆட்டு மகமை கட்டளை திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டுள்ளனர். ஆடுகளை அடைத்துள்ள பகுதிக்கு அருகிலேயே பா.ஜ.க.வினர் அடைக்கப்பட்டுள்ளனர்.

ஆடுகள் தொடர்ந்து சத்தமிட்டு வருவதோடு, துர்நாற்றம் வீசுவதாகவும் பா.ஜ.க. மகளிரணியினர் புகார் தெரிவித்தனர். ஆடுகளின் சத்தத்தால் மகளிரணி நிர்வாகிகள் கண்டன முழக்கமிடுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இந்த மண்டபத்திற்கு அருகில் விற்பனைக்காக ஏற்கனவே 200 ஆடுகள் அடைக்கப்பட்டுள்ள நிலையில், மேலும் 100 ஆடுகள் அங்கு அழைத்து வரப்பட்டன. இதனால் ஆடுகளுக்கு மத்தியில் கடும் துர்நாற்றம் உள்ள பகுதியில் தாங்கள் அடைத்து வைக்கப்பட்டு உள்ளதாக, பா.ஜ.க.வினர் குற்றம் சாட்டினர். இதனால் அப்பகுதியில் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

## மதுரையில் ஊழல் புகார் வேலூர் ஜெயில் அதிகாரி வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை

வேலூர், ஜன.5

வேலூர் மாவட்டம், அரியூர் அம்மையப்பன் நகரை சேர்ந்தவர் தியாகராஜன். இவர் வேலூர் மத்திய ஜெயிலில் சிறை நிர்வாக அலுவலராக வேலை பார்த்து வருகிறார்.

கடந்த 2019 முதல் 2023 வரை மதுரை மத்திய ஜெயிலில் நிர்வாக அலுவலராக பணியாற்றினார். அப்போது கைதிகள் தயாரிக்கும் கைவினை பொருட்களுக்கான மூலப் பொருட்களை வாங்குவதாக கூறி ரூ.1 கோடியே 30 லட்சம் ஊழல் செய்ததாக மதுரை லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு புகார் வந்தது.

இது குறித்து மதுரை லஞ்ச ஒழிப்பு போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

இந்தநிலையில் வேலூர் அரியூரில் வசித்து வரும் சிறை நிர்வாக அலுவலர் தியாகராஜன் வீட்டில் இன்று வேலூர் லஞ்ச ஒழிப்பு இன்ஸ்பெக்டர் மைதிலி தலைமையில் 5 பேர் கொண்ட லஞ்ச ஒழிப்பு போலீசார் அதிரடி சோதனை செய்து வருகின்றனர்.

இந்த சோதனை சிறைத் துறை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பரமபத வாசல் திறப்பை காண முதலில் விண்ணப்பிக்கும் 500 பேருக்கு அனுமதி இலவசம்: அமைச்சர் சேகர்பாபு



சென்னை, ஜன.5

சென்னை திருவல்லிக்கேணி பார்த்த சாரதி கோவிலில் வைகுண்ட ஏகாதசி முன்னேற்பாடு பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு செய்தார். அப்போது அவர் கூறியதாவது:

திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோவிலில் வைகுண்ட ஏகாதசி பரம பத வாசல் திறப்பை காண முதலில்விண்ணப்பிக்கும் 500 பேருக்கு அனுமதி இலவசம்.

பரமபதவாசல்திறப்பை காண்பதற்கு ஒரு நபருக்கு ரூ.500 என 1,500 பேருக்கு அனுமதி வழங்கப்படும்.

மதியம் 2 மணி முதல் 4 மணி வரை கர்ப்பிணிகள், முதியோர், மாற்றுத்திறனாளிகளுக்கு தனி வழி அமைத்து சிறப்பு தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று கூறினார்.

# சென்னையில் 203 சுடுகாடுகளில் குப்பைகள், செடிகள் அகற்றம்



சென்னிய, ஜன.5

சென்னை மாநகரை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்ற நோக்கத்தில் மாநகராட்சி பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

சாலைகள், பஸ்நிலையங்கள், பஸ் நிறுத்தங்கள், நிழற் கூடங்களில் குப்பைகள், போஸ்டர்கள் ஒட்டப்பட்டு இருந்ததை அகற்றி வருகிறார்கள். கடந்த 30 ந்தேதி சென்னையில் உள்ள பஸ் நிறுத்தங்களில் உள்ள நிழற் கூடங்களை தூய்மை செய்யும் பணி நடைபெற்றது.

இந்த நிலையில் மாநகராட்சிக்கு சொந்தமான 203 சுடுகாடுகளில் தீவிர தூய் மைப்பணி இன்று காலை 6 மணியில் இருந்து 8 மணி வரை நடந்தது. சுடுகாடு மற்றும் இடுகாடுகளில் மண்டி கிடந்த முட்புதர்கள், செடிகள், குப்பைகள், கட்டிட கழிவுகளை தூய்மை பணியாளர்கள் அகற்றினார்கள். 15 மண்டலத்திற்கு உட்பட்ட சுடுகாடுகளில் மாநகராட்சி மண்டல அலுவலர்கள்தலைமையில்தூய்மை பணி நடந்தது.

திருவொற்றியூர் நவீன எரியூட்டும் மயான பூமி, ஈஞ்சம்பாக்கம், கண்ணம்மாபேட்டை, மயிலாப்பூர், ஆலப்பாக்கம், புழல், எண்ணூர், சாந்தி நகர், நெசப்பாக்கம் உள்ளிட்ட அனைத்து பகுதியிலும் உள்ள சுடுகாடுகளில் குப்பைகளை அகற்றினார்கள்.

பொதுவாக மயானங்களில் தூய்மைப் பணி நீண்ட காலமாக செய்யாததால் குப்பைகள், சடங்குகள் செய்வதற்காக கொண்டு வரப்பட்ட கழிவுகள் ஆங்காங்கே கிடந்தன. அவற்றை சேகரித்து லாரிகளில் ஏற்றினர். மரம், செடி களின் இலைகள் உதிர்ந்து குப்பைகளாக காட்சியளித்தன. அவையெல்லாம் அதிகாரிகள் முன்னிலையில் அகற்றப்பட்டது.

# மதுரை சிறையில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை




மதுரை, ஜன.5

மதுரை மத்திய சிறையில் போலி கணக்குகள் மூலம் சுமார் ரூ.1.63 கோடிக்கு ஊழல் நடந்துள்ளதாக புகார் எழுந்தது.

ஊழல் தொடர்பாக 3 சிறைத்துறை அதிகாரிகள் உட்பட சில வியாபாரிகள் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்தது.

இந் நிலையில் மதுரை மத்திய சிறையில் கைதிகள் தயாரிக்கும் பொருட்களில் ஊழல் நடந்த விவகாரம் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை சிறையில் சோதனை நடத்தி வருகின்றனர்.

மதுரை மத்திய சிறை வளாகத்தில் 10 க்கும் மேற்பட்ட லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

சென்னை, சேலம், மதுரை உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட இடங்களில் லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை நடத்தி வருகிறது.

# திருச்செந்தூரில் கருப்பு நிறத்தில் காட்சியளிக்கும் கடல்



திருச்செந்தூர், ஜன.5

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு நாள்தோறும் ஏராளமான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வருகின்றனர்.

திருவிழா மற்றும் விடுமுறை நாட்களில் வெளி மாவட்டங்கள் மட்டுமல்லாமல் வெளி மாநிலங்கள், வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்து சுவாமி தரிசனம் செய்து செல்வார்கள்.

அவ்வாறு கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வரும் பக்தர்கள் கோவில் அருகில் உள்ள கடலில் புனிதநீராடி குடும்பத்தோடு சுவாமியை தரிசனம் செய்தது வழக்கம்.

இந்த நிலையில் கடந்த 3 நாட்களாக திருச்செந்தூர் கடல் கருப்பு நிறத்தில் காட்சியளிக்கிறது.

எப்போதும் நீல வண்ணத்தில் காட்சி அளிக்கும் திருச்செந்தூர் கடல் தற்போது கருப்பு வண்ணத்தில் அலைகள் அதிகமாக காட்சியளிக்கிறது. கடற்கரை பகுதிகளில் கருப்பு நிறங்கள் படிந்த மணல்கள் ஆங்காங்கே கரை ஓரத்தில் ஒதுங்கி உள்ளன. தற்போது வடகிழக்கு பருவமழை முடிவுக்கு வருவதால் ஒரு வாரமாக கடலுக்குள் காற்றின் திசை மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. அந்த நேரங்களில் கடற்கரை பகுதியில் கடல் சீற்றம் ஏற்படும்.

அப்படி கடல் சீற்றம் ஏற்படும் நேரங்களில் கடலின் அடிப்பகுதியில் உள்ள மணல்கிளறி கடல்தண்ணீர் குழம்பிய நிலையில் கருப்பு நிறத்தில் மாறி காணப்படும்.

அதனால் தான் திருச்செந்தூர் கடல் தற்போது கருப்பு நிறத்தில் காட்சியளிப்பதாக கூறப்படுகிறது.

கடந்த 2 நாட்களாக கடல் சீற்றம் அதிகமாக காணப்பட்டு கரை அரிப்பு ஏற்பட்டு சுமார் 10 அடி வரை ஆழம் காணப்பட்டது. அந்த நிலைமை சற்று மாறி இன்று சுமார் 3 அடி அளவுக்கு அரிப்பு காணப்படுகிறது.

இந்நிலையில் கூட்டத்தை கட்டுப்படுத்துவதற்காக கடற்கரையில் பேரிகாடு கொண்டு தடுப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. அனாலும் பக்தர்கள் எந்த வித அச்சமின்றி கடலில் புனித நீராடி வருகின்றனர்.

# கோவில்பட்டி அருகே ஆயுதங்களுடன் கைதான 3 பேர் பற்றி திடுக்கிடும் தகவல்கள்



கோவில்பட்டி, ஜன.5

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி அருகே உள்ள லிங்கம்பட்டி கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் சந்தேகப்படும்படி மர்ம நபர்கள் தங்கி இருப்பதாக மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு ஆல்பர்ட் ஜானுக்கு தகவல் கிடைத்தது.

இதுகுறித்து அவர் உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கும்படி கோவில்பட்டி டி.எஸ்.பி. ஜெகநாதனுக்கு உத்தர விட்டார்.

இதையடுத்து டி.எஸ்.பி. ஜெகநாதன் தலைமையில் சப்இன்ஸ்பெக்டர்கள் செந்தில்குமார், மணிமாறன் மற்றும் போலீசார் செல்லத்துரை, சுரேஷ், அருண், செந்தில் ஆகியோர் கொண்ட தனிப்படையினர் லிங்கம் பட்டியில் உள்ள அந்த வீட்டை மாறுவேடத்தில் சென்று கண்காணித்தனர்.

அதில் அந்த வீட்டில் குற்றவாளிகள் இருப்பதை உறுதி செய்த போலீசார் அவர்களைப் பிடிக்க அந்த வீட்டுக்கு சென்றபோது வீட்டில் இருந்தவர்கள் உள்பக்கமாக பூட்டி க் கொண்டு கதவைத் திறக்க மறுத்துள்ளனர். கதவை உடைத்து அவர்களை கைது செய்ய தனிப்படை போலீசார் முயன்ற போது, திடீரென கதவை திறந்து கண்ணிமைக்கும் நொடியில் வீட்டில் இருந்து 3 பேர் தப்பி சென்றனர்.

இதனை தொடர்ந்து தனிப்படை போலீசார் அவர்களை துரத்திச் சென்று துப்பாக்கி முனையில் மடக்கி பிடித்து கைது செய்து விசாரணை நடத்தினர். அதில், அவர்கள் மதுரை புது மீனாட்சி நகரை சேர்ந்த அழகுராஜா என்ற கொட்டு ராஜா (வயது 29), மதுரை கீரை துறையை சேர்ந்த முனியசாமி (50) மற்றும் கோவில்பட்டியை சேர்ந்த தங்கராஜ் (28) என்பது தெரியவந்தது.

கைது செய்யப்பட்ட அழகுராஜா மீது 3 கொலை வழக்கு உள்ளிட்ட வழக்குகளும், முனியசாமி மீது 4 கொலை வழக்குகள் உள்ளிட்ட 11 வழக்குகளும் நிலுவையில் உள்ளன. தங்கராஜ் மீது 4 கஞ்சா வழக்குகளும் உள்ளது.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து அரிவாள் மற்றும் கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள், 15 கிராம் கஞ்சா ஆகியவற்றை பறிமுதல் செய்துள்ளனர்.

பிரபல ரவுடிகள் இங்கு ஏன் தங்கியிருந்தனர்? வேறு யாரையும் கொலை செய்ய திட்டமிட்டு இருந்தார்களா? அல்லது வேறு ஏதும் காரணமா? என்பது குறித்து நாலாட்டின்புதூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மதுரையில் 2 குழுவினருக்கும் நீண்ட காலமாக பகை இருந்து வருகிறது. இதில், கோவில்பட்டியில் தற்போது கைது செய்யப்பட்டுள்ள இருவரும் ஒரு கோஷ்டியை சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.

மதுரையில் தங்களுக்கு எதிர் முகாமை சேர்ந்தவர்களால் அச்சுறுத்தல் இருந்ததால் கோவில்பட்டி லிங்கம்பட்டி பகுதியில் வீடு எடுத்து பதுங்கி இருந்ததாக அவர்கள் கூறினர். ஆனால், வேறு யாரையும் கொலை செய்யத் திட்டமிட்டு பதுங்கி இருந்தனரா? என தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது என போலீசார் தெரிவித்தனர்.

## நிவின் நயன் நடித்த டியர் ஸ்டுடெண்ட்ஸ் படத்தின் ஃபர்ஸ்ட்லுக் வெளியீடு




2023 ஆம் ஆண்டு ஷாருக்கான் நடிப்பில் வெளிவந்த ஜவான் திரைப்படத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்திருப்பார் நயன்தாரா. அவர் தமிழ், மலையாளம், தெலுங்கு, இந்தி என அனைத்து மொழிப் படங்களில் நடித்து வருகிறார்.

2019 ஆம் ஆண்டு தியான் ஸ்ரீனிவாசன் இயக்கத்தில் நிவின் பாலி மற்றும் நயன்தாரா இணைந்து நடித்த படம் 'லவ் ஆக்ஷன் டிராமா'. ஷான் ரகுமான் இத்திரைப்படத்திற்கு இசையமைத்து இருந்தார். படம் வெளியாகிய போது மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது.

தற்பொழுது நயன்தாரா மீண்டும் நிவின் பாலியுடன் இணைந்து 'டியர் ஸ்டுடண்ட்ஸ்' நடித்துள்ளார். அறிமுக இயக்குனரான சந்தீப் குமார் மற்றும் ஜார்ஜ் பிலிப் இயக்கியுள்ளனர்.

பாலி ஜூனியர் மற்றும் ரவுடி பிக்சர்ஸ் இணைந்து இப்படத்தை தயாரித்துள்ளது. இந்நிலையில் படத்தின் ஃபர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

## பிரதீப் ரங்கநாதன் நடித்த டிராகன் படத்தின் ஃபர்ஸ்ட் சிங்கிள் வெளியானது




ஓ மை கடவுளே திரைப்படத்தை இயக்கிய அஸ்வத் மாரிமுத்து அடுத்ததாக டிராகன் திரைப்படத்தை இயக்கியுள்ளார். இப்படத்தில் பிரதீப் ரங்கநாதன் கதாநாயகனாக நடித்துள்ளார்.

இந்த படத்தை ஏ.ஜி.எஸ். நிறுவனம் தயாரித்துள்ளது. இந்தப் படத்திற்கு லியோன் ஜேம்ஸ் இசையமைக்கிறார்.

இப்படத்தில் கயடு லோஹர் , விஜே சித்து, ஹர்ஷத் மற்றும் பிரபல இயக்குநர்களான மிஷ்கின் , கவுதம் வாசுதேவ் மேனன், மரியம் ஜார்ஜ், சித்ரா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தின் படப்பிடிப்பு இறுதிக் கட்டத்தை நெருங்கி உள்ளதாக இயக்குநர் அஸ்வத் மாரிமுத்து தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், இப்படத்தின் முதல் பாடலான ரைஸ் ஆஃப் தி டிராகன் வெளியாகியுள்ளது. விக்னேஷ் சிவன் வரிகளில், அனிருத், நடிஷா தாமஸ், எல்ஃபே கோயர் இப்பாடலை பாடியுள்ளனர். இதில் ஆபிசில் நடக்கும் பாடலாக அமைந்துள்ளது. இந்த பாடலில் கவுதம் வாசுதேவ் மேனன் மற்றும் பிரதீப் ரங்கநாதன் இணைந்து நடனமாடும் காட்சி அமைந்துள்ளது. இப்பாடல் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது.

## பொங்கல் ரேசிலிருந்து விலகிய '2K லவ் ஸ்டோரி'



சுசீந்திரன் இயக்கி உள்ள படம் '2K லவ் ஸ்டோரி'. இப்படத்தில் கதாநாயகனாக ஜெகவீர் அறிமுகமாகி உள்ளார். மேலும் இப்படத்தில் மீனாட்சி கோவிந்தராஜன், பால சரவணன் , அந்தோணி பாக்யராஜ், ஜெயப்பிரகாஷ், வினோதினி வைத்தியநாதன், ஜி. பி. முத்து உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

இப்படத்துக்கு டி.இமான் இசையமைத்துள்ளார். சுசீந்திரன் இமான் இணைந்துள்ள 10வது திரைப்படம் இதுவாகும்.

2K தலைமுறையின் காதல், நட்பு என அவர்களின் வாழ்க்கையை பிரதிபலிக்கும் படமாக இப்படம் உருவாகி உள்ளது. மேலும், வெட்டிங் போட்டோகிராபி எடுக்கும் இளைஞர்களின் வாழ்வில் நடக்கும் சம்பவங்களை அடிப்படையாக கொண்டு படத்தின் திரைக்கதை அமைந்துள்ளது. இப்படத்தின் படப்பிடிப்பு கோவை மற்றும் சென்னையில் நடைபெற்றது. இந்தத் திரைப்படத்தின் டீசர் ட்ரெய்லர் பாடல்கள் ஆகியவை வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது.

இதையடுத்து வருகிற 10ந்தேதி உலகமெங்கும் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில், இப்படம் பொங்கலுக்கு வெளியாகாது என அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் ரசிகர்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

பொங்கல் பண்டிகைக்கு அஜித்தின் 'விடாமுயற்சி' மற்றும் முன்னணி நடிகர்களின் படங்கள் எதுவும் வெளியாகாததால் '2K லவ் ஸ்டோரி' உள்பட 11 படங்கள் திரைக்கு வரும் என அறிவிப்பு வெளியானது. இந்நிலையில், '2K லவ் ஸ்டோரி' விலகியதை அடுத்து மற்ற படங்கள் வெளியாக உள்ளன.

## VIDEO: சுழலும் 57 மின்விசிறிகளை 1 நிமிடத்தில் நாக்கால் நிறுத்தி கின்னஸ் சாதனை படைத்த இந்தியர்



சுழலும் 57 மின்விசிறிகளை நாக்கால் தடுத்து நிறுத்தி இந்தியாவை சேர்ந்த கிராந்தி ட்ரில்மேன் என்பவர் கின்னஸ் சாதனை படைத்துள்ளார்.

தெலுங்கானாவின் சூர்யாபேட்டையைச் சேர்ந்தவர் கிராந்தி குமார் பணிகேரா டிரில்மேன். இத்தாலியின் லோ ஷோ டீ ரெக்கார்ட்[ Lo Show Dei Record] என்ற தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சமீபத்தில் இவர் பங்கேற்றார்.

அதில் 57 ஓடும் மின் விசிறிகளை 1 நிமிடத்துக்குள் தனது நாக்கால் நிறுத்தியுள்ளார். தனது நாக்கை பயனப்டுத்தி அவர் மின் விசிறிகளின் சுழலும் பிளேடுகளை நிறுத்தும் வீடியோவை கின்னஸ் உலக சாதனைகள் (GWR) அமைப்பு அதன் எக்ஸ் தளத்தில் பகிர்ந்துள்ளது.

அவர் இந்த உலக சாதனையை படைக்கும்போது அந்த ஷோவில் இருந்த ஜட்ஜ்கள் உட்பட அனைவரும் ஆச்சர்யத்தில் மூழ்கினர். எப்போதும் வித்தியாசமான செயல்கள் மூலம் மக்களை வியப்பில் ஆழ்த்தும் பணிகேரவின் இந்த சாதனை அவரை கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறச் செய்துள்ளது. இதை பயிற்சி இல்லாதவர்கள் முயற்சிப்பது ஆபத்தில் முடியும்.

## சாம்பியன்ஸ் டிராபி: இந்திய அணியின் கேப்டனாக ரோகித்துக்கு பதில் ஹார்திக் பாண்ட்யா?



பாகிஸ்தானில் அடுத்த வருடம் ஐசிசி சாம்பியன்ஸ் டிராபி நடைபெற உள்ளது. இந்த தொடர் ஹைபிரிட் மாடலாக நடத்த உள்ளதாக ஐசிசி அதிகாரப்பூரவமாக அறிவித்துள்ளது. அதன்படி போட்டிகள் பாகிஸ்தான் மற்றும் துபாயில் நடத்தப்படும். இந்தியா விளையாடும் போட்டிகள் பாகிஸ்தானில் நடைபெறாது எனவும் துபாயில் நடைபெறும் எனவும் ஐசிசி திட்டவட்டமாக கூறியுள்ளது.

8 அணிகள் பங்கேற்கும் இதில் பங்கேற்கின்றனர். இவை இரண்டு பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், வங்கதேசம், நியூசிலாந்து அணிகள் இடம் பெற்றுள்ளன. பி பிரிவில் ஆப்கானிஸ்தான், ஆஸ்திரேலியா, இங்கிலாந்து, தென் ஆப்பிரிக்கா அணிகள் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் இந்த தொடரில் இந்திய அணியின் கேப்டனாக ஹார்திக் பாண்ட்யா நியமிக்கப்பட உள்ளார் என தகவல் வெளியாகி உள்ளது. ரோகித் சர்மாவை ஒருநாள் கேப்டன் பதவியில் இருந்தும் நீக்க பிசிசிஐ ஆலோசனை நடந்துவதாக தகவல் வெளியாகி உள்ளது.

ரோகித் டி20 உலகக் கோப்பையுடன் டி20 போட்டியில் ஓய்வை அறிவித்தார். தற்போது டெஸ்ட்டில் மோசமான பேட்டிங் மற்றும் கேப்டஷிப்பால் பெரும் விமர்சனத்துக்கு உள்ளாகி, ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட்டில் விளையாடவே இல்லை. அவர் டெஸ்ட்டிலும் ஓய்வு அறிவிக்க போகிறார் என்ற தகவலும் வெளியாகி உள்ளது. இதனால் பிசிசிஐ அடுத்த ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியின் கேப்டனை நியமிக்க ஆலோசனை மேற்கொள்வதாக தகவல் வெளியாகி உள்ளது.

## பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ்: துனீசிய வீராங்கனை காலிறுதிக்கு முன்னேற்றம்



பிரிஸ்பேன் ஓபன் டென்னிஸ் போட்டி ஆஸ்திரேலியாவில் நடந்து வருகிறது.

இதில் பெண்கள் ஒற்றையர் பிரிவின் 3வது சுற்று ஆட்டத்தில் துனீசியாவின் ஒன்ஸ் ஜபேர், அர்மேனிய வீராங்கனை எலீனா உடன் மோதினார் .

இந்த ஆட்டத்தில் ஒன்ஸ் ஜபேர் 64, 16, 64 என்ற செட் கணக்கில் வென்றுகாலிறுதிசுற்றுக்கு முன்னேறினார்.

இன்று நடைபெறும் காலிறுதி சுற்றில் ஒன்ஸ் ஜபேர், ரஷிய வீராங்கனை மிர்ரா ஆண்ட்ரிவாவை சந்திக்கிறார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.